அறப்போர்

ஆசிரியர்: அரங்கண்ணல்

12 பக்கம்

16 காசு

ஒளி - 3 | 17-5-'63 வெள்ளி | கதிர் - 10



உள்ளே

அண்ணாவின் வேண்டுகோள்

இந்தியை எதிர்ப்போம்-
தயாராகுக தாயகமே!

நம்முடைய உணர்ச்சியை வெளிக் காட்ட வேண்டிய காலம் நமக்கு மிக நன்றாகத் தெரியும். இன்று கழகத்தை தரம் மிக்கவர்கள் தாக்கிப் பேசி வருகிறார்கள். இதன் மூலம் கழகத்தின் வளர்ச்சி தான்அதிகரிக்கிறது. பெரியார் ஈ. வெ. இராமசாமியாலேயே ஒழிக்க முடியாத ஒரு கழகம் தி.மு. கழகம். அதை அழிக்கலாம் என்று எண்ணுபவர்கள் ஏமாளிகள்.

நாளிதழ்களின் ஆதரவை நம்பிக் கழகத்தை நான் தொடங்கவில்லை. நாளிதழ்கள் கழகத்திற்கு ஆதரவளிக்காதது பற்றி நாம் வருத்தம் கொள்ளத் தேவையில்லை. நாளிதழ்கள் நல்ல அருமையான யோசனைகளைக் கூறினால் அதைத் தி.மு. கழகம் ஏற்றுக் கொள்ளும். தன்னுடைய நடவடிக்கைகளைத் திருத்திக் கொள்ளும். தி.மு. கழகம் எப்படி இயங்க வேண்டும் என்று கழகத்தினர் கடிதம் எழுதினால், அதில் சிறந்த கருத்தாக இருந்தால், அதை நான் ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக இருக்கிறேன். நான் கோபித்துக் கொள்வேனே என்று யாரும் அச்சம் கொள்ளத் தேவை இல்லை.

நாம் சென்று கொண்டிருக்கிற பாதையில் எனக்கு நிறைய நம்பிக்கை இருக்கிறது. ஆட்சி மொழி மசோதா மக்கள் சபையில் வருவதற்கு முன்பே டில்லிப் பட்டணத்தில் உள்ள தென்னக மக்கள் ஒவ்வொருவரும் இச் சட்டத்தினால் தென்னகம் எப்படி வாழும் என்றுதான் கேட்டுக் கொண்டே இருந்தார்கள். அந்த அளவுற்குச் சோகத்துடன் காணப்பட்டார்கள். மக்கள் சபையைப் பொறுத்த வரையில் தி.மு. கழக உறுப்பினர்களின் பணியைப் பலரும் பெரிதும் பாராட்டி வருகிறார்கள். மக்கள் சபையில் திரு. மனோகரன் பேச்சையும், தடைச் சட்டம் பற்றி திரு. இரா. செழியன் பேசிய பேச்சையும் மிகவும் உன்னிப்பாகக் கேட்டார்கள். 1965-ஆம் ஆண்டுக்குப் பிறகும் கூட ஆங்கிலம் நீடிக்கப்படும் என்று அடித்துப் பேச காங்கிரசுத் தலைவர்களுக்கு மனவலிமை இல்லை. இந்தி நுழைவைத் தமிழக மக்கள் முழுமூச்சோடு எதிர்க்கிறார்கள் என்பதை அரசினர் உணருகிறார்கள். ஐந்து கண்ணனைக் காட்டிக் குழந்தைக்குச் சோறு ஊட்டுவது போல சீனப் பகைவனைக் காட்டி பல பயங்கர சட்டங்களைக் காட்டுகிறார்கள் அரசினர்.

இந்தித் திணிப்பைத் தீவிரமாக எதிர்த்துப் போராட நாட்டு மக்கள் தீவிரம் காட்டி வருகிறார்கள். எங்களுக்கு நீங்களே வழி காட்டுங்கள் என்று திரு. மதியழகன் கேட்டுக் கொண்டார். வழிகாட்ட வேண்டிய கட்டம் வந்தால் நானே வழி காட்டுவேன். மணமக்களை ஒரு பெரியவர் 'பதினாறும் பெற்றுப் பெரு வாழ்வு வாழ்க' என்று வாழ்த்துவது போல அவர் [இராசாசி] இருக்கிறார்.வாழப் போகிறவர்கள் மணமக்கள் தான். அந்த மணமக்களைப் போல் நீங்களும் நானும் தான் இருக்கிறோம்; நாம் யார் காட்டும் வழியிலும் சென்று விட மாட்டோம். கடந்த கால அனுபவங்கள் எனக்கு ஏராளமாக இருக்கின்றது. தி.மு.

கழகம் என்ன செய்ய வேண்டும் என்று நாளிதழ்கள் கருத்துத் தெரிவிக்கலாம். இந்தித் திணிப்பைக் கண்டித்து நாளிதழ்கள் இடையறாத போராட்டம் நடத்தினால் டில்லிப் பட்டணத்தின் பிடிவாதம் தளரும்.

இப்போது நம்மை எதிர் நோக்கியுள்ள முக்கிய இரு சிக்கல்கள் மீது வாதிட சூன் 6, 7, 8-ஆம் நாட்களில் சென்னையில் தி.மு. கழகப் பொதுக் முழு கூடுகிறது.

இந்த 3 நாட்களில் பொதுக் குழுத் தோழர்கள் தங்கள் உள்ளத்தில் இருக்கிற எல்லாக் கருத்துக்களையும் மிகத் தெளிவாக என்னிடம் எடுத்துச் சொல்வார்கள்.

அவர்கள் தெரிவித்த கருத்துக்களை எடுத்துக் கொண்டு நான் அவர்களுக்குச் சில கருத்துக்களைச் சொல்வேன். என்னுடைய கருத்துக்களைக் கேட்டுக் கொண்டு மறுபடியும் திருப்பி எனக்குக் கருத்துக்களைச் சொல்வார்கள். அவைகளையெல்லாம் அலசி ஆராய்ந்து பார்த்து, தி.மு.க. ஒரு நல்ல முடிவெடுக்கும்.

அப்படி எடுக்கின்ற முடிவில் நாம் ஒரு கடுமையான போராட்டத்தில் ஈடுபடவேண்டிய முடிவாக இருக்குமேயானால் அதற்கு உங்களை தயாராக்கிக் கொள்ள வேண்டுமென்று நான் கடற்கரைக் கூட்டத்திலேயே கேட்டுக் கொண்டேன். இன்றைய தினமும் அதைக் கவனப்படுத்துகிறேன்.

எந்த நேரத்திலும் அழைப்பு வருமென்று தயாராகக் காத்துக் கொண்டிருக்க வேண்டும்.

இதிலே தயக்கப்படுகின்றவர்கள் விலகி யிருக்கலாம். அவர்களைப் பற்றி நான் கோபப் படவில்லை. குறை சொல்லவும் இல்லை. யாராலே கடுமையான தண்டனையை எளிதாக ஏற்றுக் கொண்டு ஈடுகொடுக்க முடியுமோ அவர்களைத் தயாராக்கிக் கொண்டு, தயாராக இருப்பார்களேயானால் தி. மு. கழகம் தகுந்த நேரத்தில், தகுந்த முறையில். திட்டத்தைத் தீட்டும்.

ஆனால் உடனே தீட்ட வேண்டாமா என்று கேட்டால் நமக்கு அவ்வளவு அவசரமில்லை.

இது பெரியாரே போராட்டம் நடத்திய போது நான் சொன்னது.

பெரியார் தெருத் தெருவாகப் பிள்ளையாரைக் கொண்டு போய் உடைத்த போது நம்முடைய தோழர்களுக்கெல்லாம் கூடக் கொஞ்சம் பயம், பெரியார் இப்படிப் பட்ட 'புரட்சியான' காரியத்தைச் செய்கிறார்; தி.மு.க. ஒதுங்கியிருந்தால், ஒழிந்தே போய் விடாதா என்றார்கள். நான் அப்போது சொன்னேன்—அதிலே முன்னேற்றக் கழகம் ஒழிவதானால் அது வளர்ந்ததே தப்பு என்றேன்!

ஒருவர் செய்தாலே, அதைச் செய்யாத இன்னொருவர் கெட்டுவிட வேண்டுமென்றால் அவர்கள் வளர்ந்ததே தப்பு!

வாசகர்கள் கவனிக்க!

8-ம் பக்கம் 3-வது கலம், 7-வது வரி "பணக்காரனிடம் கையேந்தி கட்சியை வளர்க்கின்றவர்கள்!!" என்பதோடு அந்தக் கட்டுரை முடிவுறுகிறது.

"அண்ணாவின் வேண்டுகோள் கட்டுரையின் இந்த இடத்திலிருந்து விடுபட்ட தொடர்ச்சி 8-ம் பக்கம் 3-வது கலம் 2-வது பாராவிலிருந்து ஆரம்பமாகி அந்தப் பக்கத்தில் முடிகிறது.

[ஆ-ர்]



அரண்மனைக்கு எதிரில் இரவெல்லாம் ஏராளமாக மக்கள் வந்துசேர்ந்து கொண்டிருந்தார்கள். பெய்த மழையையும் பொருட்படுத்தவில்லை, அரண்மனையின் கதவுகளுக்குமுன்னால் இரும்பான தூண்கள் இருந்தன. ஆண்களும் பெண்களும் ஆ! ஓ! என்று கூச்சலிட்டவாறு இருந்தவிதம், சந்தையைப் போல இருந்தது. காலைமலர்ந்தது! கதவுகளில் ஒன்று ஒருபக்கத்தில் திறந்திருப்பது தெரிந்தது. ஒருவன், வழிகாட்டினான். உடனே, எல்லோரும் விழுந்தடித்துக்கொண்டு அரண்மனைக்குள் ஓடினர். பெரிய தாழ்வாரம்! அதைத்தாண்டித் தோட்டம்! அதற்கப்பால் அரசியின் அந்தப்புரம்! ஓடும் மக்களை யாரும் தடுக்கவில்லை. ஒரு வீரன்கூட அங்கே காணப்படவில்லை. அவர்கள் போட்ட கூச்சலும், சப்தமும் அரண்மனையை அலறடித்தது. அரண்மனை அந்த நேரத்திலும் வரப்போகும் நிரந்தர தூக்கத்தை நினைத்துத் தூங்குவதுபோலக் கிடந்தது.

சலவைக்கற்கள் பதித்தபடிக்கட்டுகளைத்தாண்டினால், உள்ளேயிருந்த தர்பார் மண்டபத்துக்கு அடுத்தாற்போல் அரசியின் அந்தப்புரம் இருந்தது. அரசனுடைய இருப்பிடப் பகுதிக்கும் ராணியின் இருப்பிடத்துக்குமிடையில் பல அறைகளிருந்தன. போய்வர, அவைகளுக்குமத்தியில் சின்னஞ்சிறிய தாழ்வாரங்கள், இருந்தன, அங்கே மங்கலான வெளிச்சம் அப்போதும் எரிந்து கொண்டிருந்தது. அங்கேயிருந்த படிக்கட்டில் ஆறு வீரர்கள், வழக்கமாக நிற்பது வழக்கம். அவர்கள் நின்று கொண்டிருந்தார்கள். எதிர்பாராமல் இப்படியொரு கூட்டம் வருவதைக்கண்டதும் அவர்களுக்கு ஒன்றும்புரியவில்லை. என்னசெய்வது, எங்கே ஓடுவது என்று தீர்மானிப்பதற்குள் மக்களின் கூட்டம் அவர்களைச் சூழ்ந்துகொண்டது. ஒருவன் அடித்தான்; ஒருத்தி இடித்தாள். கையிலிருந்ததைக் கொண்டுதாக்கவே அந்த ஆறு வீரர்களும் பேச்சுமூச்சற்று சாய்ந்தனர். மாடியைநோக்கி மக்கள் ஓடினர்! கந்தல்துணியைப்பொறுக்கும் தொழிலாவியான ஒருவன் தன் கையிலிருந்த கோடரியால் மூச்சற்றுக்கிடந்த வீரர்களின் தலையை வெட்டுவதற்காக முயன்றான். பாரிசிலிருந்து வந்ததன்பலனை அறுவடை செய்ய எண்ணினான் போலும்!!

மாடிப்படியில் இரண்டுவீரர்கள் நின்றார்கள். கூட்டத்தைக் கண்டு அவர்கள் வாளையுருவுவதற்குள் கீழே தள்ளப்பட்டார்கள். வெறிகொண்ட கூட்டம் அங்கே தென்பட்ட கதவொன்றைத் திறந்துகொண்டு பாய்ந்தது. அதற்கு அப்பால் சென்றால் ராணியின் மெய்க்

அரங்கண்ணல்

காப்பாளர்கள் அறையாகும். "எங்கே அந்த ஆஸ்திரியாக்காரி?" "துரோகி அண்டாய்னட் ஒழிக!" "அவள் நெஞ்சைப் பிளப்போம்! வெளியே எடுப்போம்! தலையைவெட்டுவோம்!" என்று கத்தினர்.

உடம்பெல்லாம் புழுதி! உடையோ கந்தல்! கண்களிலோ பலவிதமான வெறி! தெளிவில்லாத ஆத்திரம்!. இவைகளுடனிருந்த பெண்களில் சிலரிடம் வீடுதுடைப்பங்கள் இருந்தன. அவைகளின் நுனியில் கத்திகளைச் செருகிக் கட்டியிருந்தார்கள். ராணியின் அறைக்கும் அவர்களிலிருந்த இடத்துக்கும் மூன்றே மூன்று அறைகளிலிருந்தன! ராணியோ வெளியில் கேட்ட கூக்குரல் கேட்டு விழித்தெழுந்தாள். என்ன, ஏதுவென்று அவளுக்குப்புரியவில்லை. ஆங்காங்கே நின்ற மெய்க்காப்பாளர்களும் நிலைமையைச்சமாளிக்கத் தங்களால் முடியாது என்று கருதியதால், தலைமறையாயினர். ஒரே ஒருவன் மட்டும் மிஞ்சினான்! அவன் இராணியின் சேடிகள் தங்குமறைக்கு ஓடி, விபரம் சொன்னான். "அரசியைக்காப்பாற்றுங்கள்! அவர்கள் கொல்ல வருகிறார்கள். இரண்டாயிரம் புலிகள் வருகின்றன. நான் ஒருவன்தானிருக்கிறேன்," என்று அவன் அலறினான்.

அறைக்கதவைத்தாழ்ப்பாளிட்டுவிட்டு ஒருத்தி அரசியின் அறைக்குள் ஓடினாள். உடுத்திக்கொள்ளவும் நேரமில்லை, ஓடி மன்னர் அறைக்குச் சென்றுதப்புங்கள் என்று சொன்னாள். மேரி அண்டாய்னட் படுக்கையைவிட்டுஎழுந்த நிலையில்' சரியாக உடுத்தாமல், ஒரே ஒரு மேலங்கியை எடுத்துப் போர்த்திக்கொண்டு, பக்கத்திலிருந்த பாதையின் மூலம் இருட்டாகயிருந்த தாழ்வாரத்தின் வழியாக ஓடினாள். அந்தப் பாதையின் முடிவில் இரு கதவுகள் கொண்டவாசலிருந்தது. அது எப்போதும் திறந்துதான் கிடக்கும். ஆனால், இன்று இந்தக்குழப்பத்தின் காரணமாக வெளிப்பக்கம் தாழ்ப்பாள் போடப்பட்டு மூடிக்கிடந்தது! என்னசெய்வாள் அரசி? தன் மெல்லிய கைகளால், கதவுகளைத்தட்டினாள்.

மக்கள் மன்றம் அவளுடைய இதயக்கதவுகள் திறக்காதா என்று ஏங்கிய காலம் ஒன்றிருந்தது. அப்படிப்பட்ட அரசி, இன்று சாதாரண மரக் கதவு திறக்காதா என்று ஏங்கினாள். அவளுடைய நெஞ்சை நாம் படும்பாடு தட்டாதா என்று தவித்ததுண்டுமக்கள். அப்படிப்பட்ட அரண்மனையாள் இன்று ஐயோ! ஐயோ! என்று கைவலிக்கக் கதவுகளைத் தட்டினாள். ஏழைகள் துயர் கேட்டும் பதிலிறுக்காமல் செல்லும் பிரான்சு நாட்டுப் பிரபுக்களின் உள்ளங்களைப்போல அக்கதவு இருந்தது. திறக்கவில்லை. கதவுகளுக்கப்புறம் யாரும் இல்லாதது போலவும் தெரிந்தது. ஐந்துநிமிடங்கள்! அரசி, தட்டுகிறாள்; தட்டுகிறாள்; தட்டிக் கொண்டேயிருக்கிறாள். ஆத்திரங்கொண்ட மக்களோ, அதோ, அவள் அறைக்குள் நுழைந்துவிட்ட சப்தம் கேட்கிறது. அங்கிருந்து எட்டிப் பார்த்தால், அகில உலகமும் போற்றிப்புகழ் வாழ்ந்த அரசி அகப்பட்டுவிடுவாள். இதயம் துடிக்கிறது பிரெஞ்சுநாட்டுப் பீடாதிபதியின் பிரியவில்லிக்கு! விரியன்பாம்பே என்று விளித்தபடி மக்கள் அலைகிறார்கள்— அவளைத்தேடி!! இந்தப்பயங்கரமான வேளையில்......

(தொடரும்)

சந்தா விவரம்

உள்நாடு

வருட சந்தா ரூ. 8-00

6 மாத சந்தா ரூ. 4-50

வெளிநாடு

வருட சந்தா ரூ. 9

6 மாத சந்தா ரூ. 5

வளையல்காரருக்கும் வைத்தியருக்கும் ஒரு 'லைசென்ஸ்' உண்டென்பார்கள்! எந்தப் பெண்ணாகயிருந்தாலும் அவர்களுடைய கையைப் பிடித்துப் பார்க்கும் அருகதை அவர்களுக்கு மட்டுமே உண்டு. அந்தக் காலத்தில் வைத்தியர்கள் கிழவர்களாயிருப்பார்கள்! இந்தக் காலத்தில் எத்தனை வாலிபர்கள் எம். பி. பி. எஸ். பட்டம் பெற்று டாக்டர்களாகி விடுகிறார்கள்!!

டாக்டர் கார்மேகம் நல்ல வாலிபன், அழகன், நல்ல பிராக்டீஸ் நடந்து கொண்டிருந்தது. எப்படியாவது அவனுக்கு 'மூணுமுடிச்சு' போட்டுவிட வேண்டுமென்பதில் முனைந்திருந்தார்கள் அவன் பெற்றோர்கள். தனக்குக் கலியாணமே வேண்டாமென்று ஒரேயடியாய் அவன் மறுத்து வந்தான். டாக்டர் படிப்பின் போது உடற்கூறுகளை அக்குவேறு ஆணிவேறாக அறுத்தெல்லாம் பார்த்ததால் அவனுக்கு உடலின் மீது வந்த வெறுப்பல்ல காரணம். மாறாக, அவனது வாலிப வயதுக்குள் பொருத்தமான 'வாடிக்கை'கள் அவனுக்கிருந்தன. மருந்து வாங்க அவனிடம் வரும்

மனைவி

வனிதைகளும் உண்டு. 'மருந்து' கொடுத்தபடி செல்லும் மங்கையரும் உண்டு. நம்பவழி சொன்னவள் அம்சா!

"சார்! இந்தப் பக்கமா எட்டு நாளா வலி?", என்கிற தகவலுடன் தான் வந்தாள் அவள். முதலில் கார்மேகமும் "எந்தப் பக்கம்?", என்று கேட்டபடிதான் ஸ்டெதாஸ் கோப்பைக் கையிலெடுத்தான், பரிசோதித்தான். மருந்தும் கொடுத்தான், பணத்தையும் பெற்றான். பாதி ராத்திரியில் டெலிபோன் வந்தது. ஸ்கூட்டரில் சென்றான். வாசலில் காத்திருந்தார் வயதான ஒரு கிழவர். அம்சாவின் கணவர் அவர்! அலறிக் கொணடிருந்த அம்சா, டாக்டர் வந்ததும் அடங்கினாள்.

மீண்டும் ஸ்டெதாஸ் கோப்......வலி எங்கே? என்ற வினா மருந்து தடவுதல். திரும்பும் போது டாக்டர் கார்மேகத்தின் இருதய வீணையால் மெதுவாக வலியேற்பட்டிருந்தது. அம்சா என்ன செய்வாள் பாவம்? உதிரும் சருகின் மனைவி. அவளது ஏழ்மை, அந்தக் கிழவருக்கு மூன்றாம் தாரமாக்கியிருந்தது. கிழவரின் மனைவி யென்பதால் இளமை ஓடிவிடுகிறதா?...... பிறகும், விளக்கம் வேண்டுமா? டாக்டர் கார்மேகம் 'கற்பு' இழந்தான்.

முதல் அனுபவம் பலரைச் சும்மா விடுவதில்லையே! அவனுக்கும் தான் செய்வது தவறு என்று தெரியும். டாக்டர் என்கிற 'லைசென்ஸ்' இருக்கின்றதே! யார் என்ன சொல்ல முடியும்? 'கைராசிக்காரர்'... 'சிடுமூஞ்சியில்லை'... 'கவனித்துக் பார்க்கிறவர்'... என்கிற புகழ் அவனுக்குக் கிடைத்தது. அந்தளவுக்கு அவன் நினைப்பேட்டில் ஆட்களும் அமரலாயினர். அவனுக்கே, 'நர்சிங் ஹோமை'ச் சாத்திவிட்டு— எங்கேயாவது ஓடிவிடலாமா என்கிற அளவுக்கு விரக்தி வந்தது. சொட்டு சொட்டாகத் தேன் கிடைத்தால் அதன் சுவை தெரியும்? 'பைப்'பைத் திருகினால் தண்ணீர் சொட்டுவது போலத் 'தேன்' கிடைத்தால்! செச்சே, என்று முனகலானான். பெண்கள் வந்தால், கூட யாராவது ஆண்கள் வரமாட்டார்களா என்று நினைக்கிற அளவுக்கு ஆயிற்று அவனது நிலைமை. எத்தனைப் பெண்கள் இந்தக் காலத்து நாவல்களைப் படித்து விட்டுக் கெட்டு விடுகிறார்கள் என்கிற கணக்கு அவனுக்குத் தெரியும்! எத்தனை பேர், கலியாணமாகாத டாக்டருக்குத் தான் மனைவியாகலாம் என்கிற ஆசையில்— இல்லாத நோய்களை யெல்லாம் சொல்லிக் கொண்டு வருகிறார்கள் என்பதை எண்ணி அவனே சிரித்துக் கொள்வான்.

இந்த தொல்லை நீங்க, 'கல்யாணமானவன்' என்கிற தகுதிக்குத் தன்னை ஆளாக்கிக் கொள்வதென்கிற முடிவுக்கு வந்தான். பெற்றோர்களாகவே பார்த்துக் கமலத்தைத் தேர்ந்தெடுத்தனர். அவன் குடும்பம் செல்வச் செருக்கில் மிதப்பது. அதனால் ஆடம்பரமாக எல்லாம் நடந்தது. எத்தனையோ பேரைத் 'தொட்டும்தட்டியும்' அவன் பார்த்திருந்தாலும் கமலத்தின் கையைப் பிடிக்கும் போது அவனையறியாமலே மயிர்க்கூச்செறிந்தது. நாணத்தால் குனிந்திருந்த அவள் தலை நிமிர மாட்டாளா என்று அவன் தவித்த போதுதான் "காதல்" என்றால் என்னவென்பதை உணர்ந்தான். 'தனக்கு அவள்— அவளுக்குத் தான்! என்று நினைத்த போது இன்பமான ஒரு பொறுப்பு தன்னிடம் வந்திருப்பதைப் பெருமையோடு அவனால் எண்ண முடிந்தது. அவனும் அவளும் அன்று பல தடவைகள் அந்த வீட்டுக்குள் சந்திக்க நேர்ந்தது. இந்நேரம் வேறு பெண்ணாகயிருந்தால் தொட்டிருப்பான்; சீண்டியிருப்பான்; சிரித்திருப்பான். ஆனால், இவளிடம்? அவனையறியாமலேயே ஒரு மரியாதை பிறந்தது. அவன் ஆண் பிள்ளை, அதுவும் டாக்டர்! என்றாலும் அவளை அவன் பகிரங்கமாகப் பார்க்கவில்லை, இரகசியமாகவே பார்த்தான். இதிலிருந்த இன்பத்தை இத்தனை நாளும் அனுபவிக்காதது—போன்ற உணர்வு அவனுக்கு ஏற்பட்டது. தெரியாமலா திருமணம் என்று பெயரிட்டார்கள்?

° ° °

மல்லிகையின் மணம் அந்த அறையெல்லாம் கமழ்ந்தது. வத்தியின் புகை மணத்தை எங்கும் பரப்பிற்று. தென்றல் கிறுகிறுவென அடித்தது. அவனுடைய வீட்டு மேல் மாடியின் அறை முதல் இரவுக்காக ஜோடிக்கப்பட்டிருந்தது. அவன் விரும்பாமலே அவனிடம் ஓடிவந்து 'உட்காரவா! நிற்கவா!' என்று கேட்ட பெண்கள் உண்டு. இப்போதும் ஸ்கூட்டரை எடுத்துக் கொண்டு "பேவுண்டு"களிடம் போனால் அவன் விரும்பியதைப் பெற முடியும். நாட்டிய மாலா... சினிமா மோகினி... என்று பலபெயர்கள் உண்டு அவன் குறிப்பேட்டில், ஆனால் அவன் கவனம் வெளியிலேயே இருந்தது! சிரிப்பொலி கேட்கும். ஓடிவந்து கட்டிலில் உட்கார்ந்து எட்டிப் பார்ப்பான். விளக்கைக் கீழே அணைப்பார்கள்! விறுவிறென்று கொஞ்சம் 'சென்ட்' எடுத்துப் பூசிக் கொள்வான். அவனுக்கு அது 'முதல்' தடவையல்ல. ஆனாலும் என்ன பரபரப்பு!!

கமலம் வந்தாள். தலை கவிழ நின்றாள். அவளது மெல்லுடலை அவன் தொட்ட போது என்றும் கண்டறியா ஒரு புத்துணர்ச்சி பெற்றான். பேசாமல் அப்பெண்ணழகிப் பழத்தை யெடுத்து நீட்டிய போது 'தன்னைக் கவனிக்க ஒருத்தி' யுள்ளாள் என்கிற பெருமை அவனைப் பூரிக்கச் செய்தது. அம்சா......ராதிகா.....மாலினி என்று பயப்படாமல் உச்சரிக்கும் அவன் உதடுகள் 'கமலம்' என்றழைக்கும் போது நடுங்

(10—ம் பக்கம்பார்க்க)

அறப்போர்
ஆசிரியர்: அரங்கண்ணல்
ஒளி - 3 | 17-5-'63 | கதிர் - 10

தாய்க்கு இழுக்கு!... ய்க்குச் சிறப்பா!!

°° °° °°

"ஓ! என் மக்காள்! உமது குரல் நெறிக்கப்படுகிறது இருதயம் கிழிக்கப்படுகிறது. உமது எதிர்காலம் இருட்டறையில் தள்ளப்படுகின்றது. வாழ்க்கைக்கு எது வழியோ, எது நமக்கு விழியோ, அது பறிக்கப்படுகின்றது. பல்லிளித்துப் பேசுகிருர்கள்! பசப்புகிருர்கள்! பாரதப்புத்திரரன்ரே என்று குலாவிக் கொஞ்சுகிருர்கள்! குழவியின் கையில் இனிப்பை கொடுத்து அதன் பிறகே கழுத்துச் சங்கிலியைப் பறிப்பான் காதகன். அவனை விட மிஞ்சுகின்றனர், அவசரத்தில்! அதி மதுரமென்பீர், அகவற்பா எனச் சொல்வீர், முத்தொள்ளாயிரமென்பீர், மோகனச் சிலம்பு எனச் செப்புவீர், குறளமுதம் எனக் குரலெடுத்து ஒலிப்பீர், வளையாபதியெனும் குண்டலகேசியென்பீர், கம்பனின் கவிதைச் சோலையிலே மிதப்பீர்! திருவாசகத்துக்கு உருகாதோர் வேருெரு வாசகஞ்துக்கும் உருகார் என வியந்துரைப்பீர், பள்ளுப் பாட்டென்பீர் பத்துப்பாடலெனச் சொல்வீர், பதினென்கீழ்க் கணக்கெண்பீர், எம்மொழியிலும் இலாத தொல்காப்பியம் எனப் புகழ்வீர், சிலேடைப் பாட்டுக்கள் என்று சிந்து பாடுவீர், காளமேகத்தைக் காட்டுவீர், அரியும் அரனும் போட்டி போட்டுண்ட தமிழ் என்பீர், முருகனும் எம்மான்! அவன் பயின்ற மொழியெனப் பதிகம் பாடுவீர், என்புருவான பெண்ணை உயிரோடழைத்தத் தமிழ் என்பீர், கடலில் கல்லை மிதக்கவிட்ட இனிய எம் தமிழ் என்பீர், முதலையுண்ட பாலனை யழைத்த தமிழ் என அழகுபட பேசுவீர், எனதரும் பெரியோர்காள்! புலவீர்காள்! புராணப் போதகர்காள்! பண்பாடுகூட்டத்தினரே! பரணர்தம் பரம்பரையே! சேரன் செங்குட்டவனின் தீரத்தை அழகு வரிகளால் வடித்துக் காட்டும் கூட்டமே! புகழேந்தி பூச்சூடிய இனமே! புலி பதுங்கியதுண்டோ புன்மைத் தேரைக்கு? எலி எங்காவது அரசனுனதுண்டோ சிங்கத்தின் நாட்டுக்கு? நத்தைக்கு மகுடமோ? நல்முத்துச் சாக்கடையிலோ? கத்துக்கடல் சூழ் தமிழகம் நத்திப் பிழைக்க வந்தோரின் வெறிக்குப் பலியாவதோ? வீரமரபன்ரே நாம்! வேங்கையை முழங்கையால் அடித்ததன்ரே நம்பாட்டியர் பரம்பரையே! வெண்மணலும் சொல்லுமே நம் வீரகாவியங்களை! மானங்காத்க மாண்டுமடிந்த மறவர்தம் எண்ணிக்கையை வாயிருந்தால் வானம் செப்புமே! அள்ளிக் கொடுத்த வள்ளல்கள் உண்டு! அவர் புகழ்பாடி தமிழைத் துள்ளிக் குதிக்கவிட்ட குணாளர்கள் ஆயிரமாயிரம்! அப்படிப்பட்ட நம் வாழ்வுக்கு விலங்கா? வாய்க்குப் பூட்டா? மொழிக்குச் சிரச்சேதமா? தமிழகத்தின் விழிக்குப்பழுதா?",

—என்று விம்மலோடு கேட்கிறது, நாடு! என்றுமிலா உணர்ச்சியோடு, எழுந்து கேட்கிறது, நாடு!!

"அக்கிரமம்! அடாது! கூடாது! கொடி கட்டி அவர்கள் ஆளவோ கொண்டு வந்தோம் சுயராஜ்யத்தை? மடிபிச்சைக்காரி மாதரசிக்குக் கல்தா கொடுப்பது போல வளராத இந்தி வளமான நம் மொழியின் இடத்திலா? வடவருக்கு நாமென்ன மட்டமோ? அவர்களுடையது மட்டும் தான் மொழி! நம்முடையது வெறும் கிளிஞ்சலோ!!"

—என்று மனதுக்குள் உருகி உருகி, வெளியே சொல்ல முடியாமல், வெதனைப்படும் காங்கிரஸ்காரர்கள் உண்டு.

°°

தமிழகம் இன்று தவிக்கிறது! டில்லி நிறைவேற்றிய மொழி மசோதா கண்டு குமுறுகிறது! கொட்டுகிருர்கள், அனைவரும், கண்ணீர்! எரிமலையின் நிலை! எழுதவொணுத வேதனை!!

ஆனல், தமிழகத்தின் ஆட்சியினை நடத்தும் தயாபரர்களோ' இதனை எடுத்துச் சொல்ல முன்வந்தாரில்லை. நமது வேதனையைப் படம் பிடித்து அவர்தம் டில்லி எசமானர்களிடம் சொல்லிடத் துணிந்தாரில்லை. பதவி எலும்பு! அதிகாரச் சதை! அன்ருடம் பருகும் சுகபானம்!- அமைச்சர்களாய் அமர்ந்திருப்போரை, பேசா மடந்தைகளாக்கி விட்டது.

அதுமட்டுமல்ல, பேச வாய் திறந்தாலோ, அடிக்கிறது துரோக நாற்றம்! பக்தவத்சலனர் சில நாட்களுக்கு முன்பு, தமது, திருவாயைத் திறந்தார். டில்லிப் பட்டணத்துத் 'தேவதை'களின் கவனத்துக்குத் தமிழகத்தின் நிலையை உணர்த்த அல்ல; தவிக்கும் நம்தலையில் தீயை வாரிக் கொட்ட! மனந்துணிந்து, செப்பினர்,

"டில்லி நிறைவேற்றும் சட்டத்தின் மூலம் இந்தி பேசாத பகுதிகளுக்கு நன்மைதான் ஏற்படும். அதற்காகத்தான் இச்சட்டம் கொண்டு வரப்படுகிறது. 1965க்குப் பிறகு இங்கிலீஷ் இல்லாமல் இந்தியே வரவேண்டும் என்று அரசியல்மைப்பு சொல்கிறது. அதை மாற்றி 1965க்குப் பின்னரும் இங்கிலீஷ் நீடிக்க இந்தப் புதிய சட்டம் வழிசெய்கிறது."

என்ருர். வாதாடினர்! வக்கீலானர்! இந்திய ஆட்சிமொழிச் சட்டத்தை யெதிர்ப்போரைத் துரோகிகள் என்ருர்! இச்சட்டம் நமக்கு வாழ்வு தர வரும் சட்டம் என்ருர்! 1965க்குப் பிறகும் ஆங்கிலம் இருக்கும் என்ருர்! அதற்காகவே, இச்சட்டம் கொண்டு வரப்படுகிறதென்ருர்!!

"இல்லை! இல்லை!! இந்தியைத் திணிக்கவே இச்சட்டம். இந்தியறியாத பகுதி மக்களை அடிமை கொள்ளவே, இச்சட்டம் வருகிறது",

என்ரேம் நாம். பார்லிமெண்டில் பேசினேம். வெளிநடப்புச் செய்தோம், மக்களிடம் சொன்னேம். விழியைக் குத்தாதிர்கள் வேற்று மொழியைத் திணிக்காதீர்கள் என்று வேண்டினேம்.

"ஒகோ! உங்கட்கு மட்டும் தமிழ் பற்று உண்டோ? எனக்கில்லையோ! தமிழ் அழிய நான் சம்மதிப்பேனே! தமிழ் நாட்டுக்குச் கேடுவர நான் ஒப்புவேனே! அப்படியொரு நிலைவந்தால் என் முதல் மந்திரிப் பதவியை வீசியெறியவும் நான் தயங்க மாட்டேன்"

என்று, விருதை வீரர் காமராசர், மார்தட்டிப் பேசினர். நம்மைவிடத் தமிழையும், தமிழ் நாட்டையும் காக்கத் தனக்கு ஆர்வமுண்டு என்று செப்பினர்.

ஆனல். இதோ வருகிறகு, சேதி:

"டில்லி மத்ய அரசின் பைல்களில் இந்தியால் தான் குறிப்புகள் போட வேண்டுமாம்"

"பதில் எழுதும் போது, இந்தியில் தான் பதில் எழுத வேண்டுமாம்."

"இந்தி மாகாணங்களுக்குக் கடிதங்கள் இந்தியில் தான் போகுமாம்: வருமாம்."

உத்திரவு பிறப்பித்து விட்டது டில்லி! ஒருவாரம் ஆகவில்லை, ஆங்கிலத்துக்கும் இடமுண்டு என்று உறுதி சொல்லி! உருகி உருகிப் பேசினர் லால்பகதூர்! உறுதி, உறுதியெனச் சொன்னர் பண்டித நேரு;!

ஆனல், 1965க்குப் பிறகு அல்ல, 1975க்கு அப்பாலும் அல்ல, இந்த வாரமே, டில்லியைப் பொறுத்த அளவில், இந்தி ஆட்சி மொழி, ஆகி விட்டது!!

டில்லியிருந்தபடி நமது எம்.பி தோழர் செழியன் அபாயக் குரலை எழுப்புகிருர்! அரசு, நமக்குத் துரோகமிழைக்கிறது,

(9-பக்கம் பார்க்க)

ஐந்தாண்டுத் திட்டம் தந்த பரிசுகள்

1. பற்றுக்குறை
2. விலைவாசி உயர்வு
3. ஏறுமாறான பொருளாதாரம்
4. வேலையில்லாத் திண்டாட்டம்

[புள்ளி விபரக் கட்டுரை]

பெரிய தலைவலி — தீர வழியுண்டா!

"சோஷியலிச சமுதாயத்தை மனதில் கொண்டு திட்டங்களைப் போட்டோம். மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதிக் கட்டத்தில் நின்று பார்க்கும் போது பணக்காரர்களுக்குப் பலன் கொடுத்திருக்கிற அளவுக்கு ஏழைகளுக்கு நன்மைகள் எட்டவில்லை. ஏழைகள் ஏழைகளாகவேயிருக்கிறார்கள், பணக்காரர்கள் மேலும் பணக்காரர்களாகியிருக்கிறார்கள் இதன் காரணம்புரியவில்லை..", என்று தி. மு. கழகத்தைச் சார்ந்த அறிஞர் அண்ணாவல்ல, திட்டத்தின் பிதா! திட்டக் கமிஷனின் தலைவர்! இந்தியாவின் முதல்வர்! பண்டித நேரு அவர்கள், அண்மையில் வெளியிட்ட கருத்தை அனைவரும் பத்திரிகைகளில் கண்டிருக்கலாம்.

நம்முடைய மந்திரிகளைப் பார்த்து நாம் கேட்டாலோ, பொழுது புலர்ந்தது! புன்மை இருள் போயிற்று! என்று புளகாங்கிதத்தோடு பேசி, எதிர்க் கட்சிகளின் வாயை அடைப்பதில் ஈடுபடுகிறார்களே ஒழிய நாட்டில் பயங்கரமாக உருப்பெற்று வரும் பிரச்னைகளைச் வெளிப் படையாக எடுத்துச் சொல்ல அஞ்சுகிறார்கள்.

°° °° °°

"கையுண்டு! காலுண்டு! உழைக்கப் பலமுண்டு! ஐயாய்யா ஒரு வேலை கொடுங்கள்..."

"படித்தேன்! பாஸ்செய்தேன்! பட்டம்! இதோ! ஏதோ ஒரு உத்தியோகம், ஒரு வேலை..."

நாட்டில் தினசரி கேட்கிறோம்! அதிலும் ஒவ்வொராண்டும் பள்ளிகளின் பரீட்சை 'ரிசல்டு'கள் வந்த பிறகு, குரல் அதிகமாகிக் கொண்டே போகிறது!!

°° °° °°

வேலையற்றோர்

முதல் 5 ஆண்டுத் திட்ட முடிவில் —53 லட்சம்

இரண்டாவது 5 ஆண்டுத் திட்ட முடிவில் —90 லட்சம்

மூன்றுவது 5 ஆண்டுத் திட்ட முடிவில் —150 லட்சம் பேர் என்பது சர்க்காரின் புள்ளி விபரம் சொல்கிறது! மூன்றுவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் 150 லட்சம் பேர் வேலையற்றோராகயிருப்பார்களாம்!!

சர்க்காரின் இந்தப் புள்ளி விபரம் சரியா? திட்டக் கமிஷனோ அரசோ, இதற்கான "சர்வே" எடுத்ததுண்டா? என்று கேட்டால், 'சாம்பிலுக்காக' ஒரு எழுத்தில் எடுத்தோம் என்று சொல்கிறார்கள்.

சரியான விபரம் ஏன் கிடைப்பதில்லை? அரசாங்கத்துக்குத் தன் பரிபாலனத்தில் 'இவ்வளவு பேர் வேலையில்லாமலிருக்கிறார்கள்' என்று சொல்லக் கூச்சமாயிருக்கிறது. பண்டித நேருவைப் போல உண்மையை வெளிப் படையாகச் சொல்ல அஞ்சி, வெறும் பெருமைக்காக இப்படியெல்லாம் கணக்குகள் தரப்படுகின்றன.

மூன்றாண்டுகளுக்கு முன்பு வேலையற்றோர் விபரம் பற்றிக் கணக்குச் சேகரித்த மகலனோபிஸ் என்னும் பேராசிரியர் நகரத்திலும் கிராமத்திலும் மொத்தம் 4.50 கோடிப் பேர் வேலையில்லாத் திண்டாட்டத்தால் அவதிப்படுவதாகச் சொன்னார்.

44 கோடி மக்கள் வாழும் இந்திய துணைக்கண்டத்தில் ஒரு பகுதியினர்தான் வேலையில்லாதவர்களா பரவாயில்லையே—அதிகம் இருக்கும் என்றல்லவோ எண்ணினோம் என்று கருதத் தோன்றும்! மகலனோபிஸ் சொல்கிறபடி 4.50 கோடி பேர். முழுநேரமும் வேலையில்லாதவர்கள்!!

இரண்டுங்கெட்டானாகயிருக்கின்ற ஏழை மக்களின் கணக்கு இதோ:

1	மணி நேர வேலை	—	2 கோடி
4	மணிக்குக் கீழ் வேலை	—	4.50 கோடி
மாத்தில் 5	நாள் வேலை	—	3 கோடி
,, 10	,,	—	4 கோடி
,, 15	,,	—	5 கோடி

44 கோடி பேர் இருப்பதாக கணக்குச் சொல்லப்படும் இந்தியத் துணைக் கண்டத்தில். 23 கோடி பேர் "முழுநேரமும்" வேலை செய்ய வாய்ப்பின்றி இருக்கின்றார்கள் என்பது புரியும்! 23 கோடி மக்களுடைய உழைப்புச் சக்தியும் ஒழுங்கான வேலையும், பிழைப்பும் இல்லாமல், வீணாக ஒவ்வொரு நாளும் அழிகிறது! உழைக்க விரும்பியும் பாதை தெரியாமல் பாழாகிறது!!

ஒரு தேசத்தின் செல்வம்என்பது, அங்கே புழங்கும் பண மட்டுமல்ல; இயற்கை வளம், மனிதவளம் ஆகியவைதான்!! பிறகுதான் மற்ற வளங்கள்!! இந்தியாவில் மனிதவளம் ஏராளம், ஆனல் அதில் 23.50 கோடி பேருடைய உழைப்பும் எந்த விதப் பயனுமின்றி அழிகிறது.

இப்படி அழிவதால், தேசத்துக்கு ஒரு வருடத்தில் எத்தனை கோடி ரூபால் நட்டமேற்படுகிறது என்று 1950—51-ல் ஒரு கணக்கெடுக்கப்பட்டது. அக் கணக்கின்படி, ஓராண்டில் வேலையில்லா திண்டாட்டம் காரணமாக இந்திய துணைக் கண்டத்தில் 4020 கோடிரூபாய் சம்பாதிக்க வேண்டிய உழைப்புச் சக்தி வீணாகிறதாம்.

4020 கோடி ரூபாய்! பாதி ஐந்தாண்டுத் திட்டத்துக்குத் தேவையான பணம்! ஐந்து வருடம் டில்லி அரசு வரவு செலவுத் திட்டம் போடலாம். அவ்வளவு தொகை, அழிகிறதாம்!!

மீதிபேர் நிலை

ஏதோ உழைத்து சம்பாதிக்கின்றார்களே ஒழிய, வேலை செய்யும் மற்றவர்களுடைய நிலைமையென்ன! நல்லபடி வாழுகிறார்களா? 'இல்லை' என்றே சொல்ல வேண்டும்.

அமெரிக்காவில் சராசரி ஒரு மனிதனின் வருமானம் பத்தாயிரம் ரூபாய்க்குமேல்! இங்கிலாந்தில் ஐயாயிரம் ரூபாய்க்கு மேல்! இந்தியாவில் என்ன தெரியுமோ?

ஒரு மனிதனின் ஓராண்டு சராசரி வருமானம் ரூபாய் 330தான்! ஆம் வெறும் 330 தான்!

நூறு பேரில்—

45 பேரின் மாத வருவாய் ரூ 10-க்கும் 20-க்கும் இடையில்

30 பேரின் மாத வருவாய் ரூ 20-க்கும் 30-க்கும் இடையில்

24 பேரின் மாத வருவாய் ரூ 30—50-க்கும் இடையில்

ஒருவரின் மாத சராசரி வருவாய் ரூ 50-க்கு மேல்.

இந்தக் கணக்கிலிருந்தே நம் நாட்டினுடையபொருளாதார ஏற்றத் தாழ்வு எந்த வகையிலிருக்கிறது என்பது விளங்கும். பெரிய பெரியபிரபுக்களாகவும் சீமான்களாகவும் இருப்போர் மொத்த இந்தியாவிலும் இருப்போர் 0.25 கோடி பேர் கூடத் தேறமாட்டார்கள்! அவர்களையும் ஆட்டிப் படைக்கும்டாடா பிர்லாக்களின் எண்ணிக்கை நூற்றுக் கணக்கில்தான் இருக்கும்!!

இவர்கள்தான்,ஐந்தாண்டுத் திட்டங்களால் மேலும் மேலும் கொடுக்கிறார்கள் என்கிறார் பண்டித நேரு. இவர்களுக்காக ஏனைய பல்கோடி மக்களின் வாழ்க்கை வருடம்தோறும் பணயம் வைக்கப்படுகிறது.

கிராமங்களில வாழும் வக்கற்றவர்களின் தொகை நூற்றுக்கு 85 ஆகும் என்று ஜயப்பிரகாஷ் நாராயணன் தலைமையில் நியமிக்கப்பட்ட கமிட்டியொன்று சொல்லிற்று! கடந்த 10 வருடங்களில் கடன்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கையை சதவிகிதம் உயர்ந்திருக்கிறது. அதாவது, ஒவ்வொரு விவசாயியின் குடும்பமும் சராசரி 34 ரூபாய் அதிகக்கடனுக்கு ஆளாகியிருக்கிறது, அதே சமயம் ஒவ்வொரு சீமானுக்கும், அந்த உதவி, இந்த உதவி என்று தொந்தி கொழுக்க ஐந்தாண்டுத்திட்டத்தின்மூலம் பலன் போயிருக்கிறது.

உழைப்பே உயர்வு, அப்படி உழைத்தால் தான் நாட்டின் செல்வம் பெருகும் என்று அரசு, பத்திரிகைகளில் விளம்பரம் போடுகிறது! ஆனல் காலுண்டு, கையுண்டு, உழைக்க உடம்புண்டு என்று அலைவோருக்கு அரசு காட்டியுள்ள வழிகள் என்ன?

அது நிற்க! வேலையில்லாத் திண்டாட்டத்தின் மூலம் வீணாகும் உழைப்புச் சக்தியைப் பயன்படுத்த என்ன செய்ய முடியும்?

இந்தக் குறை தீரவேண்டும் என்பதற்காகத்தான் ஆலைகளை ஏற்படுத்துகிறோம், என்று சொல்கிறார்கள்!!

முடியுமா

ஆலைகள், பாக்டரிகள் ஆகியவைகளை அதிகமாக்குவதன் மூலம் மட்டும் இந்தக் கோடிக் கணக்கான வேலையற்றோரின் பிரச்சினையைத் தீர்த்துவிட முடியுமா? சுரங்கங்களிலும், பாக்டரிகளிலும், இந்தியத் துணைக்கண்ட முழுமையும் வேலை செய்வோர் சுமார் 45 லட்சம்! எப்படி இந்தச் சுரங்கங்களிலும் பாக்டரிகளிலும், மகனோபிஸ் கணக்குப்படி முழு நேரமும் வேலையில்லாமல் உலாவும் 4.50 கோடிப் பேருக்கும் வேலை கொடுக்க முடியும்? ஆகுமா? இயலுமா!!

ஆலைகள் மூலம் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கிடுவது எளிது என்று நம்புகிறார்கள். பெரிய ஆலை

ஆலைகள் மூலம் வேலையில்லாத்திண்டாட்டத்தைப்போக்கிடுவது எளிது எனறு நம்புகிறார்கள். பெரிய ஆலைகளில் ஒரு புதிய தொழிலாளியைச் சேர்க்கவேண்டுமென்றால் குறைந்தபட்சம்தேவைப்படும் மூலதனம் ரூ. 10,000 ஆகும். சாதாரண தொழிற்சாலையென்றால் குறைந்த பட்சம் ரூ. 3,000-மாவது தேவைப்படும் என்பது, கணக்கு. இந்த முதலீடுமட்டுமல்ல, ஆலைகளுக்குத் தேவையான நிலக்கரி போன்றவைகள்—அவைகளைக் கொண்டு வருவதற்கான போக்குவரத்து—மின்சாரம் ஆகியவைகளும் தேவைபடும்.

ஆகவே, எங்கு பார்த்தாலும் தொழில் மயமாக்கி, அதற்குப் பிறகே வேலையில்லாத் திண்டாட்டம் இல்லாமற் செய்ய வேண்டும் என்று எண்ணுவதற்குப் பதில தூங்கும் உழைப்புச் சக்தி பயன்படும் வகையில் அவரவர்களும், மக்களுடைய சாதாரணதேவைகளைப்பூர்த்தி செய்யும் வகையில் ஏதாவது செய்து சம்பாதிக்கும் வழி வகைகளைத் திட்டக் கமிஷன் பெரிய அளவில் செய்ய வேண்டும்.

உடலுழைப்புச் சக்தி பயன் படுத்தப்படுமானல் அதன் மூலம் உருவாகிற உற்பத்தியைக் கண்காணிக்கவும் விநியோகிக்கவுமான குமாஸ்தாக்கள்— வியாபாரிகள்— அதிகமாவர்! வாங்கும் சக்தி பெருகும். இப்படி கீழ் மட்டமும் மேல்மட்டமும் சரியாக இறங்க வழி பிறக்கும்.

உள்ள நிலை

இப்போதுள்ள சமூகத்தில் கிட்டத்தட்ட எட்டு வகையான 'வகுப்புகள்' உள்ளன என்று சொல்லலாம்.

100 இந்தியர்களில்

47 பேர்	—	நிலமுள்ளவிவசாயிகள்
9 பேர்	—	குத்தகைதாரர்கள்
13 பேர்	—	நிலமில்லா உழவர்கள்
1 பேர்	—	நிலப்பிரபு
10 பேர்	—	ஆலைகளில் உழைப்போர்
6 பேர்	—	வாணிபத்தில்
2 பேர்	—	போக்குவரத்தில்
12 பேர்	—	உத்தியோகங்களில்

நூற்றில் 69 பேர் நிலத்தை நம்பி வாழ்கிறவர்கள்! இவர்களிலும் 43 பேர் நிலத்தை வைத்துக்கொண்டு, அதில் உழவர்களை உழைக்கச் செய்து பிழைக்கும் சில்லரை மிராசுதார்கள்!! கூட்டுறவு முறை சாகுபடி செய்வது, காங்கிரசின் திட்டம் என்று பேசப்படுகிறது. இது தான் தேவையுங்கூட! ஆனல், அதற்கான முயற்சிகள் எங்கே யென்றால், 'சாம்பிள்' பார்க்கிறோம் என்கிறார்கள். இத்தனை பேருடைய உழைப்புச் சக்திக்கும் உறுதி கொடுக்கக்கூடிய எதிர்காலத் திட்டம் ஏதேனும் உண்டா? எப்படி இவர்களுடைய உழைப்புச் சக்தி தூங்காத வண்ணம் பாதுகாப்பும் உத்திரவாதமும் தரப்போகிறோம்? திட்டக் கமிஷனோ தேசத் தலைவர்களே இதைப் பற்றிச் சிந்தித்ததுண்டா?!

நகரமும் கிராமமும்

கிராமங்களிலிருப்போர் நகர வாழ்க்கையை விரும்புகிறார்கள். நவீன வசதிகளும் சுகமான வாழ்க்கையும் அமைந்திருப்பதால், இந்த ஆசை அதிகமாகி வருகிறது. "ஐயோ! கிராமத்தை விட்டு வரலாமா? கிராமத்தை தானே 'இந்தியாவே' இருக்கிறது என்று தேசப்பிதா சொன்னர்," என்று பல்லவி பாடிவிட்டால் போதுமா? அப்படிப் பாடும் எந்த மந்திரி, தன்னுடைய மாளிகையையும் காரியாலயத்தையும் ஒரு கிராமத்தில் கொண்டுபோய் வைத்துக் கொள்ள முன் வருவார்? இந்தியத் துணைக் கண்டத்தின் கிராமங்களில் சுமார் 6.50 கோடி வீடுகளிருப்பதாகச் சொல்லப்படுகிறது! அந்த 6.50 கோடி வீடுகளும், வீடுகளா? கிராமங்களுக்கு போனல் புரியும்!

என்ன வசதியிருக்கிறது! நகரத்திலுள்ள ஒரு வீட்டையும் கிராமத்திலுள்ள ஒரு வீட்டையும் எடுத்து ஆராய்ந்தால்' யார்தான் கிராமத்து வீட்டில் வாழ விரும்ப முடியும்? திருகினல் தண்ணீர் வரும்பட்டணத்தில்! ஸ்விட்சைத் தட்டினல் விளக்கு எரியும்! மலங்கழித்தால் பிறகு அதைக் காணமுடியாது பட்டணத்தில்! கிராமத்தின் நிலை அதுவா? இல்லையே!! இதை எப்படி திருத்தி அமைக்கப்போகிறோம்?

நகரத்தைப்போலக் கிராமங்களிலும் நல்ல வீடுகள் கட்டப்பட வேண்டும்.

நல்ல வசதிகள் செய்து தரப்பட வேண்டும்.

இதற்குச் சர்க்கார் உதவி செய்ய முன் வரவேண்டும். "நாங்கள் சொல்கிற பிளான் படி வீடு கட்டும் கிராமவாசிகளுக்குப் பண உதவி தருவோம்!", என்று கவர்ச்சிகரமான யோசனைகளைச் சொல்ல வேண்டும்.

டவுன் பிளேனிங் இருக்கிறதே ஒழிய "வில்லேஜ் பிளேனிங்" உண்டா இன்றைய சர்க்காரிடம்!

இது பற்றி உருப்படியான யோசனைகள் உண்டா அரசிடம்? வருடம் ஒன்றுக்கு இதற்காக 400 கோடு செலவு செய்வதாக சொல்லட்டும் டில்லி. "நான் ஒரு மடங்கு கடன் தருவேன், நீ ஒரு மடங்கு போடு" என்று சொல்லட்டும். காத்தானும் கந்தனும் புது வீடு கட்ட முன் வந்தால் 400 கோடியோடு ஒவ்வொருவரும் போடும் பாதி ரூபாயான 400 கோடியும் சேர்ந்து மொத்தம் 800 கோடி ரூபாய்க்கு ஒரு ஆண்டில் வேலை வாய்ப்புகள் கிடைக்கும்! கிராமங்களிலுள்ள தூங்கும் உழைப்புச் சக்தி வீடுகள் கட்டவும் மற்ற நவீன வசதிகளைம் பெருக்கவும் பயன்படும்!!

உழவர் நிலை

13 சதவிகிதமாகவுள்ள உழைக்கும் உழவனின் நிலை என்ன? அரசாங்கம் விவசாயத் தொழிலாளர் பற்றிய விசாரணைக் கமிட்டியைப் போட்டது. நிலமில்லாதவர்கள் இவர்கள்! அக்கமிட்டியின் அறிக்கைப்படி 108 புதுக்காசுகள் ஒரு நாளில் சம்பாதித்த ஒரு உழவன் 96 காசுகள்தான் இப்போது சம்பாதிக்கிறன். காரணம் அவனுடைய உழைக்கும் நாட்கள் வரவர குறைகின்றன! 20 சதவீதம் குறைந்து விட்டன; ஆனல் அதே சமயம் கடனே 19 சதவீதம் அதிகமாயிருக்கின்றது!!

வயலில் உழைத்த நாட்கள் போக மீதி நாட்களுக்கு இவனுக்கு என்ன வேலையைத் தர போகிறோம்? "அதற்காகவே குடிசைத் தொழில்களை அபிவிருத்தி செய்கிறோம்", என்று அரசாங்கம் பதில் தரும்? எத்தனைக் கிராமங்களில், என்னென்ன குடிசைத் தொழில்கள், இந்தஉழைப்பாளிகளுக்கு பயன்படும் வகையில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஏட்டுக்

(8-ம் பக்கம் பார்க்க)

இந்தி ஆதிக்கம் ஒழிய, தாசர்கள் காங்கிரஸ் சாய, தமிழ் மணம் கொழிக்க, தலை நிமிர்ந்து நாம் நடக்க, வரும் துணைத் தேர்தல்களில் 'மாட்டு'க்குப் போடாதீர்கள் ஓட்டு! வைத்திடுவீர் ஆதிக்கத்துக்கு வேட்டு!!

திருவண்ணமலை துணைத் தேர்தலுக்கு நிதி அனுப்பிவிட்டீர்களா, கழக பொருளாளருக்கு!

கும் பட்ஜட் பிரசங்கத்துக்கும் வேண்டுமானால் பயன்படலாமே ஒழிய உருவான நன்மைகள் மலர்ந்துள்ளன என்று

பிழைக்க வழியின்மை

போதிய ஊதியமின்மை

நல்ல வாழ்வின்மை

கடன் சுமை—இவைகளோடு நகரத்தின் பளபளப்பும் கண்களை ஈர்ப்பதால் ஏழை உழவர்கள், நகரங்களை நோக்கிக் கிளம்பி விடுகின்றனர்! இது விவசாயத்துக்கு, எவ்வளவு நஷ்டம்? அவனுக்கு வருடந்தோறும், விவசாய நேரம் தவிர மீதி நேரத்துல் உழைத்துப் பிழைக்க உருப்படியான உதவிகளை எப்போது நாம் செய்யப் போகிறோம்? அதற்கென்று என்ன யோசனைகள் அரசின் கைவசம் உள்ளன!!

ஆகவே...

இன்று போடப்படும் ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் மக்களின் நன்மைகளைப் பெருக்கவேண்டும் என்கிற ஆர்வமும் ஆசையும் இருக்கின்றது என்பதை நாம் மறுக்கவில்லை! பல விதமான ஆலைகளும், கட்டிடங்களும் முளைப்பதை (கண்டிராக்டர்களும், அதிகார ஏஜெண்டுகள் கொழுத்தாலும்) நாம் மறுக்கவில்லை!!

ஆனால் இவைகளால் மட்டும் வேலையில்லாத் திண்டாட்டத்துக்கு முடிவு கட்ட முடியுமா? கிராமங்களில் தூங்கும் உழைப்புச் சக்திக்கு உயிரூட்டம் கொடுக்க முடியுமா? நிச்சயமாக முடியாது! இன்னும் 50 ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்டாலும் முடியாது!!

ஆகவே,

1. திட்டங்கள் கிராம-விவசாயப் பொருளாதாரத்தின் அடிப்படையில் அமைதல் வேண்டும். கிராமங்களில் நகரப்புறத்து வசதிகள் அனைத்தும் பெருக வேண்டும். அதற்கு ஊக்கம் கொடுக்க, பல இலாகாக்களும், கிராமங்களிலேயே நிறுவப்படவேண்டும். வீடுகள், குடிநீர் வசதி, போன்றவைகள் நல்ல முறையில் கட்டப்பட வேண்டும்.

2. கிராம மக்கள் விவசாயம் தவிர்த்து ஈடுபடக் கூடிய சிறுசிறு தெக்ழில்களுக்கான மூலதன உதவிகள், பஞ்சாயத்துக்களின் மூலம், பெருக வேண்டும். ஏதாவது ஒரு தொழிலகம் ஏற்படுசிறதென்றால் அது கிராமத்திலேயே ஏற்படுமாறு பெய்ய வேண்டும். அப்போது, போக்குவரத்து, மின்சாரம், கட்டியம் போன்றவைகளில் பலர் ஈடுபட்டு பிழைக்க முடியும்!

3. பிரபுக்களுக்கு லைசென்சும் உதவிப் பணமும் கொடுத்து ஆலைகளை அமைக்கச் சொல்வதற்குப் பதில், சர்க்காரே எல்லாவற்றையும் செய்ய வேண்டும்.

4. பூமிக்குள்ளிருக்கும் வளம் காட்டுவளம் போன்றவைகள் தேடப்பட்டு, அவைகளைப் பயன்படுத்தும் திட்டங்கள் தீட்டப்பட வேண்டும்.

5. முக்கியமாக. உழைப்பே செல்வம் என்கிற முறையில் பொருளாதார முறைகள் சீர்திருத்தப்பட்டு நாட்டிலுள்ள பிரபு—ஏழை என்கிற பேதம் போக்கப்பட வேண்டும்.

நுனி மரத்திலிருந்து பிரச்னையைப் பார்க்காமல் அடிப் பீடத்திலிருந்து வேலையில்லாத் திண்டாட்டத்தை—இருதய சுத்தியோடு அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டும்! அமைச்சர்கள் ஊர் சுற்றுவது தங்கள் வேலையென்று எண்ணுமல், ஒவ்வொரு வருடமும், வேலையில்லாத் திண்டாட்டம் போக என்ன செய்தோம், என்று தங்கள் உள்ளங்களைக் கேட்டுக் கொள்ள வேண்டும்!!

இதெல்லாம் காங்கிரஸ் ஆட்சியில் நடக்கும்?- என்கிற சந்தேகம் உங்களைப் போலவே, எனக்கும் எழுகிறது. நிச்சயம் நடக்காது! இந்தத் தலைவலியைத் தீர்க்கும் சக்தியும் திறனும் அவர்களிடத்தில் இல்லை— ஏனெனில், அவர்கள், 'மாடல்' சோஷியலிசவாதிகள்! பணக்காரனிடம் கையேந்தி கட்சியை வளர்க்கின்றவர்கள்!!

ஆகையினுல் தான் நான் அப்போதே சொன்னேன், பெரியார் கூட அதை அடிக்கடிக் கிண்டல் செய்து கொண்டிருந்தார்- போராட்டங்களுக்குத் தி. மு. கழகம் தேடி அலையாது; வந்த போராட்டங்களை விடாது!

அலைவது எப்பொழுது; விடாமலிருப்பது எப்பொழுது- என்பது நமக்குத் தெரிந்த இலக்கணப்படி, ஆராய்ச்சிப்படி பொதுக்குழு முறைப்படி, அது அறிவிக்கப்படும்.

அப்படி அறிவிக்கப்படுகின்ற நேரத்தில் முன்னேற்ற கழகத்துடைய கண்ணியத்திற்காக மட்டுமல்ல; தாய் மொழியினுடைய தன்னிகரற்ற எதிர்காலத்துக்காக மட்டுமல்ல; எதிர்காலச் சந்ததி அடிமையற்ற வாழ்விலே வாழ வேண்டும் என்ற அடிப்படைக் கருத்துக்காகவும் நீங்கள் அனைவரும் தயாராக இருக்க வேண்டும்,

லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் என்னை,

போராட்டத்தை துவக்குவதானால் 100 தடவை யோசித்து விட்டுச் செய்யவும் என்றார். அவருக்கு, நான் அங்கே சொல்லவில்லை; இப்போது சொல்கிறேன்-நான் ராஜ்ய சபையிலே பேசுவதற்கு முன்னாலே 100 தடவை யோசித்து விட்டுத்தான் நான் பேசினேன்; இப்போது யோசிப்பதெல்லாம் 110-வது, 115-வது, 120-வது என்று இருக்கலாம்.

எண்ணித் துணிகச் கருமம்; துணிந்த பின் எண்ணுவம் என்பது இழக்கு, என்பது சின்ன வயதிலே படித்த பாடம் அது பெரியவர்களுக்குக் கூட தேவை. அது சின்ன வயதிலே படித்தது தானே; அது சின்னவர்களுக்கு மட்டும் இருக்கட்டும் என்று வைத்துக் கொள்ள வேண்டாம்; பெரியோர்களுக்குத் தான் அது மிகத் தேவை.

ஆகவே, எண்ணித்தான் காரியத்தைத் துணிந்து எடுப்போம்; ஆனால் துணிந்து எடுத்த பிறகு இம்பியளவும் அதிலிருந்து பிறழக் கூடாது என்ற ஒரு கொள்கையோடு நீங்கள் தயாராக இருக்க வேண்டும்.

என்னைப் பற்றி யாரும் கவலைப்படத் தேவையில்லை.
நீங்கள் எந்த அளவுக்குத் தீவிரம் வேண்டுமென்று கருதுகிறீர்களோ: அதற்கு ஒரு படி முன்னாலே இருக்கக் கூடியவனே தவிர அவ்வளவு வேண்டாம் என்று இழுக்கிறவனல்ல.

ஆனால் பின்னாலே நிரம்பப் பேரை வைத்துவிட்டு, நாலு பேர் மட்டும் முன்னாலே வந்து நிற்பது கூடாது என்கிற கருத்துடையவன் நான்.

"நம்மிடம் இல்லாமலிருந்தால் கூட, இன்னொருவருக்கு வழங்கக் கூடிய பொருள், ஆனந்தம் தான்.

டைனஸ்ட்

பேச்சு சுதந்திரம் வேண்டும் என்று முழக்கமிட்டுத் தான் ஒவ்வொரு சர்வாதிகாரியும் அதிகார உச்சியில் அமர்கிறான். அப்படி அமர்ந்ததுமே தன்னைத் தவிர மற்வர்களுக்கெல்லாம் அந்த உரிமையை மறுக்கிறான்,

ஹெர்பர் ஷீவர்

வேடம் கலைந்ததடி !!

தோழர் ஈ. வெ. கி. சம்பத் சிறையினின்றும், காமராசர் வந்ததும் விடுவிக்கப்பட்டார். நாங்குநேரி தேர்தலில் காங்கிரசை ஆதரிக்குமாறு மக்களுக்கு இப்பெருந் தலைவர் சம்பத் வேண்டுகோள் விட்டிருந்தார்.

அதோடு, 'இந்தியைக் காரணமாகக் காட்டி, காங்கிரசைக் கவிழ்க்கக் கூடாதெனவும் சம்பத் வெளியிட்டிருக்கிறார்.

குட்டிக்காங்கிரஸ் என்ற பெயர் சரிதானே அவர் கட்சிக்கு!!

சொன்னோம்! சொல்கிறார்கள்!!

"மந்திரம் உச்சரிப்பதுபோல் சோஷியலிசம்! சோஷியலிசம்! என்று சொல்லிக் கொண்டு சும்மாயிருக்கின்ற சர்க்கார இப்போதுள்ள அவசரநிலையைப் பயன்படுத்தி பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் எல்லாப் பாங்கிகளையும் தேசிய மயமாக்க வேண்டும். அப்போதுதான் வாணிபத் துறையில் நடக்கும் அட்டூழியங்களையும், பிரபுக்களையும், கட்டுப்படுத்த முடியும்."

எஸ். என். திவிவேதி (ஒரிசா)

"பித்தலாட்ட மோசடிகளில் ஈடுபடும் பெரிய பெரிய பிரபுக்களின் கம்பெனிகளைக் கட்டுப்படுத்த சர்க்கார் அஞ்சுகிறது. காரணம், அவைகளிடமிருந்து காங்கிரஸ் அப்போதைக்கப்போது பெற்று வரும் பிச்சைக்காசு தான்! இருதயத்தைத் தடவிப் பார்த்துக் காங்கிரஸ் மெம்பர்கள் சொல்ல வேண்டும்—இவர்களிடமிருந்து கட்சிக்கு நிதி வாங்கினீர்களா இல்லையா?

ஹோமிதாஜீ (மத்ய பிரதேசம்)

7—5—63 பார்லிமெண்டில்

(5- ம் பக்கத் தொடர்ச்சி)

எல்லா இலாகாக்களிலுமுள்ள நம்மவர்கள் தவிப்பர்! சண்டாளத்தனம்! அக்கிரமச் செயல்!—என்று அலறுகிருர்.

தில்லையிருந்தாலும் டில்லியிலிருந்தாலும் திராவிட முன்னேற்றக் கழகம், தமிழ் மக்களுக்கு வரும் தீங்கை உடனுக்குடன் எடுத்துரைப்பதைத் தன் தலையாய கடமையெனக் கருதும்.

எனவே, செழியன் எச்சரிக்கிருர்! அலறுகிருர்!!

"இந்தி எங்கும்", என்பதிலுள்ள பேராபத்தை, இந்தத் தலைமுறை மட்டுமல்ல, வரப்போகும் நமது தலைமுறைகள் எல்லாம், அனுபவிக்க வேண்டும்.

"நான் மட்டுமல்லடா, மகனே! உன்னை, உனது பரம்பரையை என்றும் கோதுமைக்காரர்களுக்குக் கொத்தடிமையாக்கி விட்டேன்", என்ரு கூறமுடியும், நாம்? குழந்தை குட்டியில்லா, காமராசருக்குக் கவலையில்லை! நாம், கவலைப் படாமலிருக்க முடியுமா?

ஃ

இந்தி தானே! என்ன அதனுல்?—என்று கேட்போர்களும் இருக்கிருர்கள்.

இந்தியாவுக்கு ஒரு பொது மொழி வேண்டாமோ? ஆங்கிலத்தை எத்தனை நாளைக்கு நாம் பொது மொழியாக வைத்திருப்பது?—என்பது. அப்படிக் கேட்பவர்கள், தரும் விளக்கமாகும்.

மின்சார விளக்கு வேண்டாம் 'மினுக்'கு விளக்கே போதும் என்று சொல்லார் யாரும்! வானவூர்தி வேண்டாம் கட்டை வண்டியே போதும் என்று மூடன் தான் கூறுவான்! இந்தி, 'மினுக்' விளக்கு, கட்டை வண்டி; ஆங்கிலம், அனுதினமும் வளரும் விஞ்ஞான மொழி. உலக மொழி.

ஐக்கிய நாடுகள் சபைக்குள் 'இந்தி' முடியாது! அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் இந்தியோடு போனுல் சாகவேண்டியது தான்!!

அகில இந்திய வானொலியில் இந்தியை நுழைப்பனபற்றி முன்னுள் சென்னை கவர்னர் பிரகாசா தலைமையில், டில்லி, ஒரு கமிட்டியைப் போட்டிருந்தது. அக்கமிட்டியின் அறிக்கை இவ்வாரம் வந்திருக்கிறது.

"இன்னும் இந்தி வளரவேண்டியது நிரம்ப இருக்கிறது. என்ருலும் வானெயில் இந்தியே பேசப்படவேண்டும். அப்படிப் பேசும்போது இந்தியில் சரியான வார்த்தை கிடைக்கவில்லையென்ருல் அந்தச் சொல்லுக்குப்பதில் ஆங்கிலச் சொல்லை உபயோகிக்கலாம்" என்று!! சொல்லுக்குமட்டும் ஆங்கிலம் தேவலாமாம்—தானிக்குப் பேருஏதி நாயனு? ஆங்கிலமே வேண்டாம் என்று பதிவிரதையைப் போலப் பேசிவிட்டு, பரவாயில்லை, பாதிராத்திரியில் படுக்கைக் காலியாயாக யிருக்கக் கூடாது, அதனுல் பக்கத்து வீட்டுக்காரர் கொஞ்சம் வந்து படுத்துக்கொள்ளும், என்று அழைத்தால், அவளைச் தூய்மையுடையவள் என்போமா! தூர்த்தை யென்போமா !!

பிடிவாதம் வடவருக்கு, அதனுல் 'இந்தி தேசியமொழி'என்கின்றனரே யொழிய, என்ன யோக்யதை இருக்கிறது இந்திக்கு நமது தேசீய மொழியாக?-என்று தி. மு. க. பன்னெடுங்காலமாக கேட்டிடும் கேள்விக்குப்பதில் இல்லை.

என்ருலும் அது தேசீயமொழியாக வேண்டுமாம்! அதைப் படித்தால்தான் வேலையாம்! அகில இந்தியத் தொடர்பாம்!!

டில்லிக்காரர்கள் உத்திரவு போட்டுவிட்டார்கள் !

சென்னை அரசு இப்போது என்ன சொல்கிறது? சீலர் பக்தவத்சலனுர், இப்போது என்ன சொல்கிருர்? ஆங்கிலம் என்றும் நீடிக்கத்தான் மொழிச் சட்டம் என்று முத்தான வாய்திறத்து சத்தாகக் கொட்டினுரே சகலஇலாகா அமைச்சர்! இப்போது என்ன சொல்கிருர்!

"தமிழுக்காத்தீமை? தமிழருக்காத்தீங்கு? வீசியெறிவேன் என் விலகலை!," என்று வீரமுழக்கமிட்டாரே, பெரியாருடைய கண்ணுன கண்மணி காமராசர், இப்போது என்ன செய்யப் போகிருர்?

இன்னும் தமிழருக்குத் தீங்குவரவில்லை யென்பாரா! தமிழ் மகன், இன்று டில்லிக் காரியாலயத்திருக்கிருன்—பம்பாய் மாநிலத்திலுள்ளான்—துர்காபூரிலிருக்கிருன். இலக்குமணபுரியிலிருக்கிருன்—அவனுடைய கதி என்ன?

" உத்தியோகங்களில் இந்தி கட்டாயப் படுத்தப்பட மாட்டாது"

என்று டில்லிமேலவையில் அறிஞர் அண்ணு கேட்ட குறுக்குக் கேள்விக்கு. அளித்தாரே லால்பகதூர் சாஸ்திரி பதில்! சொன்னசொல் உலருவதற்குள் உத்திரவு வந்து நிற்கிறதே!!

இன்று மட்டுமல்ல, இனி என்றுதான் தமிழ்மகன் முன்னுக்கு வரமுடியும்?

அவன் முன்னுக்கு வரவிரும்பினுல் தமிழ்ப்புலவனுயிருந்தால் சாகவேண்டியதுதான். இந்தியில், 'வித்வானுகவோ,' 'பண்டிதனுகவோ' ஆனுல்தான் அவன் உத்தியோகம் பார்க்க முடியும்!!

அவன் குறள், இங்கேதான்: அங்கேசெல்ல, வளமில்லாத இந்தி வேண்டும்!!

இந்தக் கொடுமை வராது என்ருர் பக்தவத்சலம்; உத்திரவாக வந்து நிற்கிறது எதிரே!

கொடுமைவந்தால், நான்பதவியை வீசியெறிவேன் என்ருர் காமராசர்; இதோ கட்டளை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது எதிரே!!

என்ன செய்யப் போகிருர்கள் தமிழக அரசின் இந்தச் சூத்ரதாரிகள்?

அவர்கள் சொன்னபடி செய்யார்—ஏனெனில், அவர்களது தோல் கடுமையானது! கால் தண்டனிட்டு தண்டனிட்டுப் பழகியது!!

ஆனுல், பதில் தரவேண்டிய பொறுப்பு தமிழகத்துக்குத் தான் உள்ளது. வந்தாரையெல்லாம் வாழவைத்தான் தமிழன் என்று பாடிடுவோரே! தமிழன் என்ருெருஇன முண்டுதனியே அவனுக்கொரு குணமுண்டு என்று கவிதை புனைவோரே! இந்த உலகினில் இருக்கும் நற்றமில் எழிலுடையோன் தமிழன் என்று எழுதுவோரே! சிலம்பின் ஒலியையும் சிந்தாமணியையும் நந்தா விளக்கும் நற்றிருட்குறளையும் நவில்வோரே! நந்தமிழ் நாட்டினரே! நமக்குத்தான் வந்திருக்கிறது, பதில் சொல்லவேண்டிய பொறுப்பு! வாட்டிடும் இந்தி வந்துவிட்டது—வம்பரின் பாம்பு நுழைந்துவிட்டது—கடிக்கவருமுன், துரத்திட எழுவீர்! நற்பணியொன்றுக்கு நம்மையர்ப்பணிக்க முனைவீர்! மனிதன் ஒரே ஒரு தடவைதான் பிறக்கிருன்—ஒரே ஒரு தடவைதான் இறக்கிருன். இடையில் அவன் மானத்தோடு வாழவேண்டும்!

தலைகுனியலாம் நம்மைவிடச் சிறந்தவனுக்கு! வெறியைத் தவிர வேறெந்தச் சிறப்புமில்லா இந்திக்கோ, நாம் சரணமடைவது? மல்லிகையை எடுத்து நுகரலாம்; மந்தியினை எடுத்தோ கூந்தலில் செருகிக் கொள்ள முடியும்? மலர் மணக்கும்! மலமுமா மணக்கும்!!

பதில் தரவேண்டிய வேளை நெருங்கிவிட்டது,

பலமுறை தோற்றது இந்தி! வென்றவர் நாம்!!

பதுங்கிப்பதுங்கி இம்முறை தோளில் தொத்தவரும் இந்தத் 'தொத்துவியாதி' அறவே ஓடவேண்டும்.

அது காமராசர் கையில் இல்லை; ஏனெனில் அவர் நோயாளி! டாக்டரல்ல!!

டாக்டர், நாம்' நம்கையில் தான் தமிழன்னையின் வாழ்வும் தாழ்வுமிருக்கிறது!!

தாய்க்கு இழுக்கு வந்துவிட்டது.

தனயர்களே! என்ன பதில் தரப்போகிறீர்?

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கின. கீழே கிடந்த அவனது சால்வையை எடுத்து அவள் மாட்டினுள்! எப்படித் தான் அதற்குள் அவளுக்கு அவ்வளவு பொறுப்பு வந்ததோ? அந்த நேரமாகப் பார்த்து டெலிபோன் மணி அடித்தது... அவன் கவனிக்காமலிருந்தான் அவள் போய் எடுத்தாள்... "உங்களை..." என்று மென்று விழுங்கியபடி சொன்னுள். அவள் கையிலிருந்து டெலிபோனை வாங்கினுன். விளக்கொளியில் அலங்காரத்தோடு நின்ற அவளைப் பார்த்த பொழுது, 'என் மனைவி' என்கிற பெருமிதம் மீண்டும் பளிச்சிட்டது. அடுத்த கணமே அவன் முகம் மாறியது! அவனுடைய டாக்டர் நண்பன், ஜெனரல் ஆஸ்பத்திரியில் பணி செய்பவன் தான் டெலிபோனில் பேசினுன், "உயிர் போய்க் கொண்டிருக்கிறது. உன்னைக் கடைசியாக ஒரு தரம் பார்க்க வேண்டுமாம். பிளீஸ்!", என்ருன், அந்த நண்பன். கார்மேகம் யோசித்தான். எதிரே மனைவி! அவன் மனம் சுழன்றது. "அர்ஜண்ட் கேஸ்!", என்று அவனுகவே சொல்லிக் கொண்டு, மாடியின் இன்னெரு வழியாக, இருளில் மறைந்தான். ஸ்கூட்டர் சப்தம் கேட்டது! சோர்ந்தபடி, படுக்கையில் உட்கார்ந்தாள், கமலம். அவள் இதயத் துடிப்பைப் போல ஸ்கூட்டரின் சப்தம் கேட்டது. கொஞ்ச நேரத்தில் அதுவும் மறைந்தது. இரண்டு கைகளையும் எடுத்து எதிரேயிருந்த திருவிளக்கைக் கமலம் கும்பிட்டாள். ஜெனரல் ஆஸ்பத்திரியை நோக்கி அவள் கணவன்- பறந்து கொண்டிருந்தான்.

°° °° °°

காந்தாமணியின் உயிர் உடலை விட்டுப் பிரிந்து கொண்டிருந்தது. அருகிலிருந்த டாக்டர், "இப்போ வந்து விடுவான்!" என்று சொல்லிக் கொண்டிருந்தார். கார்மேகம் நுழைந்தான். கட்டிலில் கிடந்த அந்த உருவத்தின் கண்களில் அவனைக் கண்டதும் ஒரு புது ஒளி பரவியது! கையெடுத்துக் கும்பிட்டாள் அவள். கார்மேகத்தின் டாக்டர் நண்பன் சமய முணர்ந்தவன் ஒதுங்கினுன். கார்மேகத்துக்கு ஒன்றும விளங்கவில்லை. உட்காரச் சொன்னுள் உட்கார்ந்தான். அவனுடைய கைகளையெடுத்துத் தன் கைகளோடு சேர்த்து வைத்துக் கொண்டாள்! கொஞ்ச நேரத்துக்கு முன்பு நடுங்கிய—சூடான—கமலத்தின் கை கவனத்துக்கு வந்தது. மணக் கோலத்தில் நின்றபடி தன் வரவுக்காகக் காத்திருக்கும் அவள் நினைவு மின்னியது. எதிரே பிணக் கோலத்தில் கிடக்கும் இவளைப் பார்த்தான். ஒரே ஒரு தரம்... ஒரே ஒரு தரம்... என்று அவள் வாய் முணுமுணுத்தது. அவள் என்ன கேட்கிருள் என்பது அவனுக்குப் புரிந்தது. புகழ் பெற்ற தாசி அவள் பலருக்குப் படிக்கட்டாகிப் பதமிழந்தவள். கார்மேகத்துக்குத் தெரியும் அவன் மேல் அவள் எவ்வளவு ஆசையோடு இருந்தாள் என்பது. கடைசி ஆசை! ஐயோ பாவம்! அவனுக்குள்ளிருந்த 'மனிதன்' சொன்னுன். குனிந்தான் ஆசை தீர அவள் அவனுக்கொரு 'இச்' அளித்தாள் நடுங்கும் கைகளால் எதிர்த் திசையைக்காட்டினுள். கொஞ்ச நேரத்துக்கு முன்பு பிறந்த குழந்தையொன்று கிடந்தது! "சத்தியம்......... உங்கள்...உங்கள்...", என்று சொல்வதற்குள் அவள் வாய் கோணிக் கொண்டது. மூச்சுத் திணறியது. வெளியிலிருந்த டாக்டர் வந்தார். அந்தப் பிணத்தின் மீது துணியை இழுத்து மூடினுர் சாவுக் கிடங்குக்குச் சேதி சொன்னுர் 'போனில்'! மரக்கட்டை போல நின்ருன், கார்மேகம். கடந்த காலக் கனவுகள் பறந்தன. பால்கோவா கொண்டு வருவாள்...பலதடவைகள் அவள் நாட்டியத்துக்கு வரச் சொல்வாள்...பணம் கூடக் கொடுப்பாள் அவன் செலவுக்கு... கனவுகளைக் கண்ணீர் மறைத்தது. கடைசியாக அவள் சொன்ன வார்த்தைகள் கவனத்துக்கு வந்தது. அது, அவன் குழந்தை. ஆனுல், மனைவியோ கட்டிலில் காத்திருப்பாள், முதலிரவுக்கு. அவன் மனதை யாரோ ஓங்கி ஓங்கி அடிப்பது போலிருந்தது. விக்கி, விக்கி அழுதான்.

°° °° °°

மணி ஐந்தாயிற்று கதவைத் திறந்தாள் கமலம். உள்ளே வந்தவர்கள் திகைத்தனர். பால் அப்படியே இருந்தது. பையனை இல்லை. 'என்னடீ' என்றனர். எப்படியோ 'கார்மேகத்தைக் காணவில்லை!' என்கிற செய்தி பரவியது. பெண்ணின் தந்தை, பையனின் தந்தை, எல்லோரும் ஓடி வந்தனர். தூங்காத அவள் விழிகளிலிருந்து கண்ணீர் பொல பொலவென்று சிதறியது. அப்போது ஒரு உருவம் மெதுவாகப் பின்கட்டு மாடிப்படி வழியாக மேலே வந்தது. கறுக்கல் மறைந்து ஊர் வெளுக்கும் நேரம். கதவோரம் வந்தது அறைக்குள் அனைவரும் நிற்பதைக் கண்டு திகைத்து நின்றது, அந்த உருவத்தை கமலம் கண்டாள். கமலத்தை நோக்கி அந்த உருவம் விரைந்தது. தன் கையிலிருந்த குழந்தையைக் கார்மேகம் நீட்டினுன். எல்லோரும் திகைத்தார்கள். 'என்ன இது?' என்று விழித்தார்கள். பெண்ணைப் பெற்ற தாயார் தலையிலடித்துக் கொண்டாள். பெரு மூச்சு விட்டார் பெண்ணின் தந்தை. அனைவருமே அவனைச் சுட்டுப் பொசுக்கி விடுவது போலப் பார்த்தனர். கமலம் குனிந்த தலையை நிமிர்த்தினுள். கார்மேகத்தைப் பார்த்தாள். அவன் கண்களிலிருந்து வழியும் கண்ணீரைக் கண்டாள். அவளையறிமாமலே அவள் கைகள் நீண்டன. குழந்தை அலறியது! மார்போடு அணைத்துக் கொண்டாள், கமலம். எல்லோரும் ஒன்றும் புரியாமல் விழித்தனர். "இந்த உலகத்தில் என்னை அறிந்தாள்— இவள்! காரணம் என் மனைவி," என்று கார்மேகத்தின் உதடுகள் உச்சரிக்கவில்லை. கட்டிலில் குழந்தையோடு உட்கார்ந்திருந்த அவள் மடியில் படுத்தான்.

°°

இன்று
ஒரு சபதம் செய்வோம்
எந்த நாளும் காப்போம்

ஆக்கிரமிப்பாளரை விரட்டி அடிப்போம என்ற நமமுடைய சபதத்தை மீண்டும் இன்று உறுதிப் படுத்திக்கொள்வோம். விழிப்புடனும் உறுதியுடனும் ஆயுத்தங்கள் செய்வோம். இப்பொழுதே வேண்டியதை செய்வோம். தேசீய சேவைப் பணியில் சேவை புரிய முன்வருவோம் ● வீண் செலவுகளைக் குறைத்துக் கொள்வோம் ● உணவும் உடையும மதிப்பிட முடியாத மதிப்பு வாய்ந்தது. ஓரளவும் வீணுககவேண்டாம ● காலமும், நேரமும்கூட மிக முக்கியம். ஒரு நிமிஷமும் சும்மா இருககவேண்டாம் ● உங்கள் பொறுப்புகளை நிறைவேற்றுங்கள் எப்பொழுதும் எல்லா விஷயங்களிலும் ஒழுங்கு முறையை கையாளவோம



தேசம்
எழும்போது
தேர்ந்து
எழுங்கள்



பண்டிதரே! என்செய்வீர்?

பண்டிதரே! பல்கலை கற்றவரே! குழந்தைகளோடு குழந்தையாவீராம்! குணத்தோடுபழகுவீராம்! ஆடுவீராம், பாடுவீராம், ஆதிகுடிமக்களின் அகமகிழ்வைப் பெறுவீராம்!!

உமக்கு இன்றுவந்துள்ள நெருக்கடி கண்டு உண்மையிலேயே சோகிக்கிறோம். விரல்காட்டிடின் அடங்கும் என்பர் காங்கிரஸ்! உமதுகுரல் கேட்டால் அட்டிசொல்லார் எவரும் என்பர்!!

விரலோ குரலோ இன்று பயன்படவில்லை. வீராதிவீரரான உம்மை வீழ்த்தும் சக்திகள் உருவாவதுகண்டு, அரசியல்வாதி என்கிறமுறையில், ஐயகோ நான் வருந்துகிறேன்!!

எப்படியாவது காங்கிரசைக்கட்டிக்காப்பாற்றிவிட வேண்டுமென நீரும் படாதபாடு படுகிறீர். ஒரு அடி முன்வைத்தால் பத்தடி பின்வாங்க வல்லவோ, நேருகிறது. பண்டிதரே! உமதுவாழ்வில் இவ்வளவு பொறுமைகளை எங்கே கற்றீர்? அக்கிரமம் என்றால் அலறி எழுவீராமே, எங்கே போயிற்று, அந்தவீரம்? கேட்கச் சகிக்கவில்லையே, பிரதமரே!!

கிருஷ்ணமேனன்—உமதுநண்பர், ஐ. நா. சபையின் தூதர், கண்டிக்கிறார் உமது ஆட்சியை! அரசியல் சட்டத்தைத்திருத்தித்திருத்தி மக்கள் உரிமைகளைக்காங்கிரஸ் அரசு பறிப்பதாகக்கனத்தக் குரலெடுத்துக் கூறுகிறார்!!

ஐந்துநீதிபதிகள்—இந்தியத்துணைக்கண்டத்தின் உயர் நீதிபதிகள்—உமது 'அரசு பிறப்பித்த பாதுகாப்புச்சட்டம்' பலவழிகளில், மக்களுரிமையைப்பறிக்கும் வகையிலிருப்பதாகச்சாடுகிறார்கள்!!

சிராஜுத்தின்—கல்கத்தாச்சீமான்! கம்பெனிப்பூமான்! அவரிடம் பதினாயிரம் போய் தேர்தல் செலவுக்கு வாங்சிக்கொடுத்தார் என்று குற்றம்சாட்டப்பட்டு நிற்கிறார் மாளவியா எனும் உமது மந்திரி.

பட்நாயக்—எனும் ஒரிசா முதல்மந்திரிக்கு உமது அறைக்கருகில் டில்லியில் இடமாம்! பல இலாகாக்குள்ளும் புகுந்து புறப்படும் அவரைக் கண்டுகாய்கிறார்களாம் உமது சகாக்கள். ஆனால் அவரோ, டில்லியிலே; ஒருபத்திரிகை ஆரம்பித்திருக்கிறாராமே!!

சாவன்—சாமர்த்தியசாலி! அவரைவிடத்தான் புத்திசாலியென்று காட்டிக்கொள்ள பட்நாயக் பாடுபடுகிறாராம். பட்நாயக் போய் அமெரிக்காவில் நமக்குப் பெருமைத்தேடித்தரவில்லை என்பதற்காக இப்போது டி. டி. கே ஐ அனுப்பியிருக்கிறீராம்! ஒருமாதத்துக்குள் இருவர்தூது. யார் வீட்டுப்பணமோ!!

பண்டிதரே! உமது அரசின் கோலாகலத்தைவிடக் கட்சியின் அலங்கோலம் கண்முன்பு தெரிகிறது.

அதுகண்டுகலங்கியே நீர், வழுக்கிவிழுகிறீர்! சொன்ன சொல்லை மீறுகிறீர் துயரப்படுகிறீர்!!

ரோஜா மிளிரும் உமதுமார்பில்—இப்போது முட்கள் குத்துகின்றன.

உமக்காக உண்மையில், பரிதாபப்படுகிறோம்.

இந்தி!

"இந்த விவகாரம் மக்கள் விவகாரம். எனவே, நமது மக்கள் அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களானாலும் சரி, தோளோடு தோள் இணைந்து நிற்கவேண்டும். இந்தித் துணிப்பை எதிர்த்துப் போராடவேண்டும்.

"ஆங்கில மொழிக்குப் பதில் இந்தியைத் திணிப்பதால் நாடு கெட்டுவிடும். இந்தியைக் கட்டாயமாகப் படிக்கத் தேவையில்லை என்று கூறிக்கொண்டே மறைமுகமாக இந்தி நுழைப்பு நடைபெற்றுக் கொண்டு வருகிறது. இந்தி பேசாத தமிழகம், கன்னடம், வங்காளம் போன்ற மாநிலங்களில் உள்ளவர்கள் விரும்புகிறவரை, ஆங்கிலமே தொடர்ந்து இணைமொழியாக இருக்கவேண்டும், இந்திபேசாத மக்கள்மீது இந்தி திணிக்கப் படமாட்டாது என்று தலைமை அமைச்சர் நேரு கொடுத்த வாக்குறுதி மீறப்பட்டுவிட்டது. வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு நேரு தயங்குகிறார். சூழ்நிலை அப்படி இருக்கிறது.

தென்னாட்டு மக்கள்மீது இந்தி திணிக்கப்பட்டால் நாடு இருண்டுவிடும். ஆகவே முன்பு தலைமை அமைச்சர் நேரு கொடுத்த உறுதிமொழியைச் சட்டத்தில் கொண்டுவந்து சேர்க்க வேண்டும்.

உறுதிமொழியை அரசியல் சட்டத்தில் திருத்தமுடியாது என்று நேரு கூறுகிறார். அரசியல் சட்டத்தில் உறுதிமொழி சேர்க்கப்படவில்லையானால் என்றைக்காவது ஒருநாள் தமிழர்கள் தலையில் இந்தி திணிக்கப்படுவது உறுதியாகும். மக்களிடம் விழிப்பும் ஒற்றுமையும் இருந்தால் இந்தியை ஒரு நாளும் ஆட்சிமொழியாகக் கொண்டு வரமுடியாது.

இந்தியர்களை அடிமைப்படுத்திய ஆங்கிலேயர்களை வெளியேற்ற எண்ணிய போது மக்கள் மனதில் சிறிதளவுகூட ஐயப்பாடு கிடையாது. அதனால் ஆங்கிலேயர்கள் நம்மைவிட்டுப் போனார்கள். நாடும் விடுதலை

(12-ம் பக்கம் பார்க்க)

பதிவு எண்: எம். 7466
அறப்போர்
இலங்கையில் செய்தித்தாளாகப் பதிவு செய்யப்பட்டது.

கேள்வி

பதில்

கேள்வி: சட்டமன்றத்தைக் கூட்டும்படி தாங்கள் நிதியமைச்சர் பக்தவத்சலத்துக்குக் கடிதம் எழுதினீர்களாமே...?

சுந்தரமூர்த்தி
முத்துப்பேட்டை

பதில்: திரு. பக்தவத்சலத்துக்கு சட்டமன்ற முதல்வர் என்பதால் முதற்படி எழுதினேன். சட்டமன்றம் கூடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டியவர் அவர். 9ந் தேதி எழுதிய கடிதத்துக்கு இன்றுவரை பதில் இல்லை! ஆனால், பத்திரிகையாளரிடம் பேசியபோது விளம்பரத்தின்மீது அக்கரை கொண்டு நான் இதைச் செய்திருப்பதாக வெளியிட்டிருக்கிறார். அவர் அதைச் சொன்னதும் பத்திரிகையாளரிடம் தானே! என்னைவிட அவருக்கு விளம்பரத்தில் அக்கரை அதிகம் என்று நான் சொல்லவில்லை. நான் சாமான்யன்; அவர் சகலா கலாவல்லவர்!!

“பட்டுக்கோட்டைக்கு வழி என்னவென்று கேட்டால் கொட்டைபாக்குக்கு விலை சொல்வதில், சமர்த்தர்.வாய்பிளந்து வருகிறதே இந்தி அதைப்பற்றி விவாதிக்க சட்டமன்றத்தைக் கூட்டுங்கள் என்று கேட்டேன். தனிப்பட்ட முறையானாலும், கழகச் சார்பென்று வைத்துக் கொண்டாலும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பிரதிநிதி செய்யவேண்டிய கடமையை ஆற்றுவதற்குள்ள ஜனநாயக வழியின்படி வேண்டுகோள் விடுத்தேன். டில்லிசட்டம் செய்தது என்றாலும் அதன் விளைவுகள் நம்மை மிகவும் பாதிக்கின்றன! அரசியல் கட்சிகள் போர்க்கோலம் பூண்டு கொண்டுள்ளன. தமிழக மக்கள், எதிர்காலம்பற்றிய அச்சத்தோடு இருக்கிறார்கள். இதைப்பற்றி விவாதிக்கவேண்டும். நமது உணர்ச்சிகளை மாநில அரசு எப்படி மதிக்கிறது அல்லது எந்தவழியில் செல்கிறது என்பதை அறிய மக்கள் உரிமையுள்ளவர்கள். மக்களின் பிரதிநிதியான நாங்கள், அரசிடமிருந்து அறிந்து தெரிவிக்கக் கடமைப்பட்டவர்கள். அதனால் கேட்டேன்! ஆனால், காங்கிரசுக்குப்பயம். சட்டமன்றத்தில் இந்தியை ஆதரித்துப்பேசினால் மக்கள் முகத்தில் விழிக்கவேண்டுமே!! அதனால், அரசுத் துறையினர், சட்டமன்றத்தைக் கூட்ட அஞ்சுகிறார்கள், கூட்டக்கூட அல்ல, எனக்குப் பதில்தரக்கூட, நமது வயதான அமைச்சர் அஞ்சுகிறார் என்று எண்ணும் போது ஜனநாயகத்தைக் கட்டிக் காப்பதில் அவருக்குள்ள சிரத்தையை நன்றாக நாடு புரிந்து கொள்ள முடியும்.

0 0 0

கேள்வி: தி. மு. க. வின் இந்தி எதிர்ப்புப் போராட்டம் எப்படியிருக்கும்?

விவேகானந்தன்
மயிலை.

பதில்: பொதுக்குழுவின் முடிவிற்குப்பிறகு வெளியாகும். ‘அறப்போர்’ என்பதே நாம் நமது போராட்டங்களுக்குக் கொடுத்துள்ள பெயர்! அதிலிருந்தே புரிந்துகொள்ளலாம், போராட்டம் எப்படி அமையும் என்பதை!!

0 0 0

கேள்வி: இந்தியில் தான் பதில் எழுதவேண்டும் என்று டில்லி உத்திரவு போட்டிருக்கிறதாமே! நம்முடைய எதிர்காலம் என்னாகும்?

தி. மு. ப. மணி.
திருச்சி.

பதில்: ஒருபயங்கரமான பள்ளத்தில் ஆழ்த்தத் திட்டமிட்டுச் செய்யப்படும் சதி இது! நம்முடைய மக்கள் இன்று விழிப்போடு தங்களது உரிமையைக் காக்கத் தவறிவிட்டால் “கோதுமை ஏகாதிபத்தியம்” கொத்தடிமை கொள்வது நிச்சயம்.

0 0 0

கேள்வி: எத்தனை பேர் இந்தி எதிர்ப்பில் சிறைசெல்வார்கள் என்று எண்ணுகிறீர்?

சிங்கராயன்,
சின்னமரத்துப்பட்டி.

பதில்: எங்கள் தலைவரின் விருப்பத்தைப் பொறுத்தது.

0 0 0

கேள்வி: நாங்குனேரியில் காங்கிரஸ் வெற்றி பெற்றுவிட்டதே!!

தங்கபாப்பு,
நெல்லை.

பதில்: ஆளுங்கட்சி வென்றது என்று சொல்லுங்கள்! அடாடா 16,000 நாடார்கள் ஓட்டும், 21,000 ஆதித்திராவிடர்கள் ஓட்டும் தமது ஆட்சியின் கட்சிக்குவர வேண்டும் என்பதற்காக முதலமைச்சர் காமராஜரும், ‘விவசாய’ அமைச்சர் கக்கனும் பட்டபாடு அவர்களுக்கல்லவோ தெரியும்!! சாதியின் அடிப்படையில் ஏகபோக உரிமை பெறமுயலும் அரசியல்வாதிகளுக்கு எப்போதுதான் புத்தி வரப்போகிறதோ?

0 0 0

(11-ம் பக்கம் தொடர்ச்சி)

அடைந்தது. அதுபோலவே இந்தியை ஒழிக்க எல்லோரும் சேர்ந்து முயற்சி செய்ய வேண்டும். இதில் யாருக்கும் சிறிதளவும் ஐயப்பாடு ஏற்படக்கூடாது.

தமிழ் நாட்டுமக்களின் பிரதிநிதிகளாக உள்ள தமிழக அமைச்சர்கள் இந்தி மொழித் திணிப்பைப்பற்றி மத்திய அரசிடம் எதிர்ப்புத் தெரிவித்திருக்க வேண்டும்.”

—ராஜாஜி

விற்பனையாளர்கள் சந்தாதாரர்கள் கவனத்திற்கு

“அறப்போர்”: அச்சகம் மாற்றியமைப்பதின் காரணமாக, அடுத்த இதழ் “அறப்போர்” வெளி வராதென்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

நிர்வாகி
அறப்போர்

இல்லற வாழ்க்கையில் பலஹீனமா?

வாலிபப் பருவத்திலே வயோதிகத் தன்மையா?

உடலில்பலக்குறைவு சக்தி குறைவா?

அப்படி இருந்தால் நீங்கள் இனி கவலைப்படத் தேவையில்லை.

பிரபல சித்த வைத்தியர்

டாக்டர் எஸ். ஆர். சிவராஜ்

அவர்களின் தயாரிப்புகளான

‘சிவராஜ்’	ராஜாமிர்தம்	(காலை, மாலை உள்ளுக்கு)
சிவராஜ்’	ராஜ்பில்ஸ்	(காலை, மாலை உள்ளுக்கு)
‘சிவராஜ்’	தாமரைத் தைலம்	(ஸ்நானத்திற்கு)
சிவராஜ்’	லேபனத்தைலம்	(மேல்பூச்சு)

இவைகளைத் தொடர்ந்து சாப்பிட்டு இழந்து போன சக்தியை மீண்டும் பெற்று வாழ்க்கையில் புத்துணர்ச்சி பெறலாம்.

1 மாதம் உபயோகிக்கும் மருந்துகள்
4-ம் சேர்ந்தது ரூ. 23-00

(தபால் செலவு ரூ. 2-50 தனி)

விபரங்களுக்கு தொடர்பு கொள்க:

சிவராஜ் சித்த ஆயுர்வேத வைத்தியசாலை

சிவதாபுரம் அஞ்சல் :: சேலம்-2

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இராம. அரங்கண்ணல், 9-ஏ, சர். சி.பி. ராமசாமி ரோடு, அபிராமபுரம், சென்னை-18.
அச்சிட்டோர்: எம். பி. சத்தியமூர்த்தி, முல்லை அச்சகம், 3-40, மவுண்ட்ரோடு, சென்னை-6